# திவிநெகும சட்டமூலம் பற்றிய குறிப்பு

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 2013 ஜனவரி**

திவிநெகும சட்டமூலம் (இதனகது கீழே சட்மூலம் என குறிப்பிடப்படுகின்றது) 2013 ஜனவரி மாதம் வாக்கெடுப்பிற்கென பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படுவதாக குறிப்பிடப்படும் ஊடக அறிக்கை 2012 டிசம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டது. சட்டமூலத்தின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் அது தொடர்பில் ஏற்படும் அடிப்படைச் சிக்கல்கள் மற்றும் தாக்கங்கள் தொடர்பிலான கருத்துக்களை முன்வைப்பதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் (மா. கொ. நி) இக் குறிப்பு தாயாரிக்கப்பட்டுள்ளது. சட்ட மூலத்தை கேள்விக்குற்படுத்தி உயர் நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்த அதேவேளை தெளிவூட்டுவதற்குத் தேவையான ஆவணங்களை மும்மொழியிலும் தயாரித்தல் ஆகிய இருவழிகளிலும் மா. கொ. நிலையம் இவ்விடயம் தொடர்பில் 2012ல் செயற்பாடுகளை மேற்கொண்டது.

**திவிநெகும சட்டமூலம் தொடர்பான பின்னணி**

அரசாங்கத்தினால் 2012 ஆகஸ்ட் 10ஆந் திகதி திவிநெகும சட்டமூலம் (இதனகத்துக் கீழே சட்டமூலம் என குறிப்பிடப்படுகின்றது) பாராளுமன்றத்தின் சபாபீடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் (மா.கொ.நி.) அதன் நிறைவேற்றுப் பணிப்பாளரும் இச்சட்டமூலத்தின் ஏற்பாடுகளை உயர் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தினர்.[1] (எஸ்சீ/எஸ்டி3/2012) உயர் நீதிமன்றத்தில் வேறு 2 மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. ஆகஸ்ட் 27 மற்றும் 28ஆந் திகதிகளில் உயர் நீதிமன்றத்தினால் மேற்படி மனுக்கள் விசாரிக்கப்பட்டதோடு உரிய விடயம் சம்பந்தப்பட்ட அதன் தீர்மானம் 2012 செப்டெம்பர் 18ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கவும்பட்டது. உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட

[1] எஸ்சீ/எஸ்டி/2012 மற்றும் எஸ்சீ/எஸ்டி.02/2012

தீர்ப்பின் பிரகாரம் மனுவின் மூலம் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக இணக்கப்பாடு காட்டப்படுவதோடு அரசியலமைப்பின் 154(எ)3 பிரிவின்படி மாகாண சபை நிரலுக்குரிய விடயங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு அத்தகைய சட்டமூலமொன்றினை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்குவதற்கு முன்னர் மத்திய அரசாங்கமானது மாகாண சபைகளுடன் கலந்துரையாடுவது கட்டாயமாகும்.[2]

அதனைத் தொடர்ந்து சட்டமூலமானது 2012 செப்டம்பர் 21[3] பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டதோடு மாகாண சபைகளின் அனுமதியின் பொருட்டு முன்வைக்கப்பட்டது. இச் சட்டமூலம் தொடர்பாக தமது அனுமதியை வழங்குவதாக எட்டு மாகாண சபைகள் விருப்பம் தெரிவித்த அதேவேளை[4] வடமாகாண சபையின் சார்பாக அதற்கான அனுமதியை வடமாகாண ஆளுநர் வழங்கியிருப்பதாக அறியக்கிடைத்தது. அதன் பின்னர் மீண்டும் இச்சட்டமூலம் 2012 ஒக்டோபர் மாதம் 9ம்[5] திகதி பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலுக்குள் உள்ளடக்கப்பட்டதுடன் மீண்டும் மா.கொ.நிலையமும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளரும் உட்பட மனுதாரர்கள் சிலரால் இச் சட்டமூலமானது மீண்டும் கேள்விக்குட்படுத்தப்பட்டது. பிரதானமாக அரசியல் அமைப்பின் 154(எ)3, உறுப்புரையின் படி பாராளுமன்ற சட்டபுத்தகத்தில் இச்சட்டமூலம் உரியமுறையில் உள்ளடக்கப்படவில்லையென்ற காரணத்தை முதன்மைப்படுத்தியும் வேறு சில காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டே இவ்வாறு கேள்விக்குட்படுத்தப்பட்டது.

உயர் நீதிமன்றம் 2012 ஒக்டோபர் மாதம் வழங்கிய தீர்ப்பின்படி சட்டமூலத்தின் பலபிரிவுகள் அரசியல் அமைப்பிற்கு முரணானது எனவும் அதன் அடிப்படையில் பாராளுமன்றில் விசேட பெரும்பான்மை விருப்புடனே நிறைவேற்றப்பட வேண்டுமெனவும் தெரிவித்தது.[6] மேலும் சட்டமூலத்தின் 8(2) மற்றும் 35(1), (ஆ), (உ), (ஊ) ஆகிய பிரிவுகள் அரசியலமைப்பின் மூன்றாவது உறுப்புரைக்கு முரணானது எனவும் அதன்படி பாராளுமன்றில் விசேட பெருன்பான்மையுடனும் பொதுஜன வாக்கெடுப்பின் ஊடாக மக்களது விருப்பையும் பெற்று நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் அத்தீர்ப்பில் குறிப்பிடப்பட்டது. மேலும் 8(2) மற்றும் 35(1), (ஆ), (இ), (ஈ) ஆகிய பிரிவுகளை திருத்தம் செய்வது மூன்றாவது உறுப்புரை தொடர்பில் காணப்படுகின்ற முரண் நிலைக்கு தீர்வாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

---

2 மனுவுக்கான மேலதிக ஆவணங்கள் தேவைப்படும் பட்சத்தில் தயவுசெய்து மாற்றுக் கொள்கை நிலையத்தினை தொடர்பு கொள்ளவும்.

3 2012 செப் 21 Adaderana.lk, "நிகழ்ச்சி நிரலிலிருந்து திவிநெகும சட்டமூலம் அகற்றப்பட்டுள்ளது" http://www.adaderana.lk/news.php?nid=19750

4 http://med.gov.lk/english/?p=13642; மாகாணசபைகள் முன்மொழிவு திவிநெகும சட்டமூலத்தை ஏற்றுக்கொண்டன" 2012 ஒக்.04, news line http://www.priu.gov.lk/news update/current affairs/ca201210/20121004provincial councils endorse proposed divi neguma bill.htm

5 http://sundaytimes.lk/news/sri-lanka/4015-divi-neguma-bill-in-parliament-on-january-8 டைம்ஸ் ஒன்லைன், http://sundaytimes.lk/index.php?option=com content&view=article&id=25305:divineguma-bill-re-introduced&catid=1:latest-news&Itemid=547,2012 ஒக் 09

6 பிரிவு 5(ஈ), பிரிவு 7, பிரிவு 11, பிரிவு 14, பிரிவு 17(க), பிரிவு 18, பிரிவு 19, பிரிவு 25(4), பிரிவு 29(4), பிரிவு 42

பொருளாதார அபிவிருத்தி அமைச்சரை மேற்கோள் காட்டி உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி 8வது மற்றும் 35[7][3] ஆகிய பிரிவுகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. மேலும் 2013 ஜனவரி மாதம் 8ம் அல்லது 9ம் திகதிகளில் சட்டமூலம் தொடர்பான விவாதம் பாராளுமன்றில் நடைபெற இருப்பதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.[8] இக்குறிப்பு தாயாரிக்கப்படுகின்ற வேளையில் திருத்தச் சட்டமூலம் கிடைக்கப்பெறாத காரணத்தினால் முன்மொழிவு திருத்தச்சட்டமூலம் தொடர்பாக மா.கொ.நிலையத்தின் கருத்தை தெரிவிப்பது முடியாத விடயமாக உள்ளது.

2012ல் கேள்விக்குட்படுத்தியதற்கு மேலதிகமாக இவ்விடயம் தொடர்பாக மா.கொ.நிலையத்தினால் நாடு முழுவதும் தெளிவூட்டல் அமர்வுகள் பல ஏற்பாடு செய்யப்பட்டன. சட்டமூலத்திலுள்ள விடயங்கள் தொடர்பாக மக்களது தெளிவின்மை அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் உள்ளடங்களாக பொதுமக்களும் இச்சட்டமூலம் நடைமுறைப்படுத்தப்படுமாயின் அதன் மூலம் எதிர்பார்பது யாது? என்பதைப்பற்றிய தெளிவை இவ்வாறான தெளிவூட்டல் மூலமாக மேற்கொள்ள வேண்டி இருந்தது. மா.கொ.நி இதற்கு முன்னர் தெரிவித்ததைப் போன்று மீண்டும் தெரிவிப்பதாவது வறுமையை மட்டுப்படுத்தவோ சமுர்த்தி அதிகாரசபை ஊழியர்கள், மலையக மற்றும் தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களுக்கும் ஏனைய அரசாங்க உத்தியோத்தர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், ஓய்வூதியங்களை பெற்றுக் கொடுப்பதோ இந்த சட்டமூலத்திற்கு சவாலாக அமையாது என்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கூறிக்கொள்ள விரும்புகிறது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இவற்றை முக்கியமான பிரச்சினைகளாக இனங்காண்பதோடு இலங்கையில் பின்பற்றப்படுகின்ற சட்டபூர்வமான சட்ட வலையமைப்பின் மூலம் கடைப்பிடிப்பதையும் ஆதரிக்கும். மாகாண சபைகளின் அதிகாரங்களை தான்தோன்றித்தனமாக பறிக்க முயற்சிப்பதையும் வரையறுக்கப்பட்ட சோதனைகளையும் சமநிலைகளையும் ஒரு அமைச்சரின் கீழ் அதிகாரங்களைப் பலப்படுத்துவதையும் எதிர்ப்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சவாலாக கொண்டிருந்தது.

சட்டமூலத்தின் பிரதான ஏற்பாடுகள் மற்றும் அது இயற்றப்படுமானால் ஏற்படும் தாக்கம் என்பவை தொடர்பாக அடிப்படையிலான வழிகாட்டலொன்றை பெற்றுக்கொடுப்பதற்காக இக்குறிப்பு 2012ல் தயாரிக்கப்பட்டது. அண்மைக்கால சம்பவங்களையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இக் குறிப்பானது அவ்வாறு தயாரிக்கப்பட்ட குறிப்புடன் புதிய விடயங்களையும் உள்ளடக்கியதாகும். சட்டமூலத்தின் பிரிவுகள் பல்வேறுபட்ட துறைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தினாலும் இக்குறிப்பின் மூலம் அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஏற்படுத்தப்படுகின்ற தாக்கம் தொடர்பாகவே பிரதானமாகக் கவனஞ் செலுத்தப்படுகின்றது. இக்குறிப்பு மற்றும் சட்டமூலம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஏனைய நடவடிக்கைகள் என்பன மூலம், சட்டத்தின் விடயப்பரப்பு மற்றும் அதிகாரப் பகிர்வு, ஆட்சி முறை மற்றும் தனி மனித உரிமைகள் மீது அது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது தொடர்பாக மக்களுக்கும் உரிய தரப்பினருக்கும்


7 "உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி திவிநெகும சட்டமூலம் திருத்தப்பட்டது". ஷாம் நுவன் கனேவத்த, திவயின 2012 டிசம்பர் 12

8 "திவிநெகும சட்டமூலம் ஜனவரி 8 பாராளுமன்றில்" news.lk 2012 டிசம்பர் 31. "குற்றப்பிரேரணை விவாதம் அடுத்த மாதம்" அஜந்த குமார அகலகட டேயிலி மிரர் 2012 டிசம்பர் 28

விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இக் குறிப்பு மற்றும் இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான விழிப்புணர்வுகள் உதவியாக அமையுமென மா.கொ.நி கருதுகிறது.

1. சட்டமூலத்தின் மூலம் தாபிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் நிறுவனங்கள்

   கிழே தரப்பட்டுள்ள குறிப்பில் விபரிக்கப்பட்டுள்ளவாறு இச்சட்டமூலத்தின் மூலம் சில நிறுவனங்கள் தாபிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதானமாகக் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய துறையானது திவிநெகும அபிவிருத்தித் திணைக்களமாகும் (4, 5 மற்றும் 6ஆம் பிரிவுகள்), திவிநெகும மாவட்டக் குழுக்கள் (20, 21 மற்றும் 22ஆம் பிரிவுகள்), திவிநெகும வலைய அமைப்புக்கள் (16, 17 மற்றும் 18ஆம் பிரிவுகள்) மற்றும் திவிநெகும சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் (10, 11 மற்றும் 12ஆம் பிரிவுகள்) ஆகிய பரந்த விடயத்துறைகளில் பல விடயங்கள் உள்வாங்கப்படுகின்ற நிறுவனங்களின் நோக்கங்கள் அதிகாரங்கள் மற்றும் பணிகள்.


அமைச்சர்
திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம் (4,5 மற்றும் 6ஆம் பிரிவுகள்)
திவிநெகும தேசிய சபை (7 மற்றும் 42ஆம் பிரிவுகள்)
திவிநெகும சம்மேளனம் (23 மற்றும் 24ஆம் பிரிவுகள்)
திவிநெகும மாவட்டக் குழுக்கள் (20, 21 மற்றும் 22ஆம் பிரிவுகள்)
திவிநெகும பிரதேச குழுக்கள் (16, 17 மற்றும் 18ஆம் பிரிவுகள்)
திவிநெகும சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் (10, 11 மற்றும் 12ஆம் பிரிவுகள்)
சமுதாய அடிப்படையிலான வங்கிகளினதும் வங்கிச் சங்கங்களினதும் முகாமைத்துவ சபை (33ஆம் பிரிவு)
சமுதாய அடிப்படையிலான வங்கிச் சங்கங்கள் (30, 31 மற்றும் 32ஆம் பிரிவுகள்)
சமுதாய அடிப்படையிலான வங்கிகள் (26, 27 மற்றும் 28ஆம் பிரிவுகள்)

2. அதிகாரப் பகிர்வின் மீதான தாக்கம்

மனுதாரர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு மற்றும் உயர் நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண சபை நிரலுக்குள் வருகின்ற பல விடயங்கள் பின்வரும் அட்டவணையில் உள்ளடங்கியுள்ளன. அரசியலமைப்புக்கான 13ஆம் திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பல விடயங்களை இதன் மூலம் சுவீகரித்துக் கொள்வதற்கு மத்திய அரசாங்கத்திற்கு இயலுமை ஏற்படுகின்றது.

13வது அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டு அதிகாரம் பகிரப்பட்ட விடயங்களின் மீது தாக்கம் ஏற்படுத்துகின்றதான இச்சட்ட மூலத்தில் உள்ளடங்கியுள்ள பல்வேறுபட்ட பிரிவுகள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.[94]

| **சட்டத்தின் பிரிவு** | **அரசியலமைப்பின் 9ஆம் அட்டவணையின் 1ஆம் நிரலில் உரிய விடயம் (மாகாண சபை நிரல்)** |
| --- | --- |
| 4(அ) பிரிவு<br>வறுமையை ஒழித்தல் மற்றும் சமூக நீதியை உறுதிப்படுத்துகின்றதான சமூகமொன்றை உருவாக்குவதற்காக தேவைப்படக்கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல் (திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம்) | விடய இலக்கம் 2 – திட்டங்கள் -<br>மாகாணங்களுக்கான பொருளாதார திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்<br>விடய இலக்கம் 10 – கிராம அபிவிருத்தி |
| 4(இ) பிரிவு<br>ஒவ்வொரு நபர் சார்பாகவும் குடும்பம் சார்பாகவும் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் | விடய இலக்கம் 16 –<br>மாகாணத்திற்குள் உணவு வழங்கல் மற்றும் விநியோகிக்கப்படுதல் |
| 4(ஊ) பிரிவு<br>மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்குத் தேவைப்படக்கூடிய பௌதீக மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் (திவி நெகும அபிவிருத்தித் திணைக்களம்) | விடய இலக்கம் 5.3 –<br>மாகாண சபை நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் சம்பந்தப்பட்ட நிர்மாணப் பணிகள்.<br>விடய இலக்கம் 6 –<br>மாகாணத்திற்குள்ளான வீதிகள், பாலங்கள் |

[9] இவ் அட்டவணையானது எஸ்.சீ.எஸ்.டி 3/2012 ஆகிய வழக்கில் கோப்பிடப்பட்ட எழுத்து மூலமான சமர்புரைகளிலும் 2012 செப்டம்பர் 18ல் பாராளுமன்றில் மீண்டும் கலந்துரையாடப்பட்ட உயர் நீதிமன்ற தீர்ப்பையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

| | |
|---|---|
| | மற்றும் இறங்குதுறைகள் |
| 4(ஐ)<br>சமூகப் பாதுகாவலர்கள் தேவைப்படும் ஆட்களுக்காக பாதுகாப்பு வலையமைப்பு ஒன்றை உருவாக்குதல்<br>திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் | விடய இலக்கம் 7.2 –<br>அநாதைகள் மற்றும் குடும்பங்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்துதல்.<br>விடய இலக்கம் 7.3 –<br>உடல், உள மற்றும் சமூக ரீதியில் அங்கவீனமுற்றோருக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் அவர்களது நலனோம்பல்.<br>விடய இலக்கம் 7.4 –<br>பலவீனம் மற்றும் சேவையில் ஈடுபடுத்த முடியாதவர்களுக்கு சலுகைகளை வழங்குதல் |
| 5(இ)<br>திவிநெகும பயன்பெறுவோரின் உற்பத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் தயாரிப்புக்கான நிலையங்களை ஏற்படுத்தல் மற்றும் அதன் விடயங்களுக்காக பௌதீக மற்றும் நிதி வளங்களை வழங்குதல். (திவிநெகும அபிவிருத்தி திணைக்களம்) | விடய இலக்கம் 15 –<br>வர்த்தக நிலையங்கள் பொதுச்சந்தைகள் |
| 5(ஒ)<br>மக்களின் வாழ்வாதாரத்தை பொருளாதார மற்றும் சமூக ரீதியாக உயர்த்துவதற்காக அதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் பேணுவதற்காக அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் (திவிநெகும அபிவிருத்தி திணைக்களம்) | விடய இலக்கம் 2 –<br>திட்டமிடல் மாகாணங்களுக்கான பொருளாதார திட்டங்களை நடைமுறைப்படுத்தல்<br>விடய இலக்கம் 5.3 –<br>மாகாண சபைகள் பட்டியலில் காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புபட்ட நிர்மாணப் பணிகள்<br>விடய இலக்கம் 6 –<br>மாகாணத்தில் உள்ள பாதைகள், பாலங்கள், இறங்குதுறைகள்<br>விடய இலக்கம் 10 –<br>கிராமிய அபிவிருத்தி |
| 9<br>சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் | விடய இலக்கம் 17.1 –<br>கூட்டுறவு மற்றும் மாகாணத்தில் கூட்டுறவு சங்க |

| | |
|---|---|
| | அமைப்புகளை பதிவு செய்தல், மேற்பார்வை, கணக்காய்வு<br>விடய இலக்கம் 17.2 –<br>மாகாணத்தில் கூட்டுறவு அபிவிருத்தி<br>விடய இலக்கம் 28 –<br>கட்டமைக்கப்படாத வர்த்தக, இலக்கிய, விஞ்ஞான, சமய மற்றும் வேறு சங்கங்களும் அவற்றை முறைப்படுத்தலும் |
| 11(ஓ)<br>சமூக மனித வலு பங்களிப்புடன் நடைமுறைப் படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை பொறுப்பேற்று நடைமுறைப்படுத்தல் (திவிநெகும பிரதேச அமைப்புக்கள்) | விடய இலக்கம் 2 –<br>திட்டமிடல் மாகாணங்களுக்கான, பொருளாதார திட்டங்களை நடைமுறைப்படுத்தல்<br>விடய இலக்கம் 10 –<br>கிராம அபிவிருத்தி |
| 15(1)<br>திவிநெகும பிரதேச அமைப்புக்கள் | விடய இலக்கம் 17.1 –<br>கூட்டுறவு அமைப்பு மற்றும் மாகாணங்களுக்குள் கூட்டுறவு சங்க அமைப்புக்களை பதிவு செய்தல் மேற்பார்வை, கணக்காய்வு செய்தல்<br>விடய இலக்கம் 17.2 –<br>மாகாணங்களுக்குள் கூட்டுறவு அபிவிருத்தி<br>விடய இலக்கம் 28 –<br>கட்டமைக்கப்படாத வர்த்தக, இலக்கிய, விஞ்ஞான, சமய மற்றும் வேறு சங்கங்களை, அமைப்புக்களை முறைப்படுத்தல். |
| 16(உ)<br>பிரதேசத்திற்குள் தமது பயன்பெறுவோரினை விவசாய அல்லது வேறு உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகள் மற்றும் வேறு உதவிகள் வழங்கல் | விடய இலக்கம் 9.1 –<br>மாகாண விடயங்களுக்காக விவசாய கருத்திட்டங்கள், மேம்படுத்தல் மற்றும் கல்வி, விவசாய சேவைகள் உட்பட விவசாயம். |
| 16(ஊ)<br>உற்பத்திகள், மூலப்பொருட்கள் கொள்வனவு களஞ்சியப்படுத்தல், சந்தைப்படுத்தல் நிலைகளை பேணுதல், விஞ்ஞான | விடய இலக்கம் 15 –<br>வர்த்தக சந்தைகள் மற்றும் வாராந்த பொதுச் சந்தைகள் |

| | |
|---|---|
| நிலையங்கள் மற்றும் நவீன சந்தைத் தொகுதிகளை ஒழுங்கு செய்தல் (தவிநெகும பிரதேச அமைப்புகள்) | |
| 18(உ)<br>பிரதேச அடிப்படையில் உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக மூலப்பொருட்கள் மற்றும் தொழில்நுட்பம் உட்பட வேறு தொடர்புபட்ட சேவைகளை வழங்குதல் மற்றும் அந்த உற்பத்திகளை சந்தைப்படுத்தல் அந்த சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல் (திவிநெகும பிரதேச அமைப்புக்கள்) | விடய இலக்கம் 10 –<br>கிராம அபிவிருத்தி<br>விடய இலக்கம் 15 –<br>சந்தை வசதிகள், பொதுச்சந்தைகள்<br>விடய இலக்கம் 21 –<br>அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் தொடர்பான தேசிய கொள்கைத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடாபான விவசாயக் கைத்தொழில், வர்த்தக, சந்தை தொழில் முயற்சிகள் மற்றும் வேறு வருமானங்களை சம்பாதிக்கும் கருத்திட்டங்கள், அத்தகைய கருத்திட்டங்கள் மற்றும் தொழில் முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அரசுக்கும் அரச கூட்டுத்தாபனங்களுக்கும் இருக்கும் அதிகாரங்களுக்கு தீங்கு ஏற்படாத வகையில் மாகாணத்துக்குள் மேம்படுத்துவதற்காக அவற்றை நிறுவுதலும் அவற்றில் ஈடுபடுவதற்கான அதிகாரங்களும் |
| 18(ஊ)<br>திவிநெகும சமூக அடிப்படை அமைப்புக்களினால் நடைமுறைப்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒத்துழைப்பு வழங்குதல் (திவிநெகும பிரதேச அமைப்புக்கள்) | விடய இலக்கம் 7..3 –<br>உள ரீதியான உடல் ரீதியான மற்றும் சமூக ரீதியான அங்கவீனம் அடைந்தவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் அவர்களின் நலன்புரி<br>விடய இலக்கம் 7.4 –<br>பலவீனமான மற்றும் தொழிலில் ஈடுபட முடியாதவர்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் |
| 26 (ஈ)<br>திவிநெகும பயன்பெறுவோர்களுக்கான கடன் வசதிகளை வழங்குதல் (திவிநெகும சமூக | விடய இலக்கம் 35 –<br>பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் சட்டம் மூலம் அல்லது சட்டத்தின் கீழ் |

| | |
|---|---|
| அடிப்படை வங்கிகள்) | அனுமதி வழங்கப்பட்டுள்ள அளவுக்கு கடன் பெறுதல் |
| 31(ஆ)<br>அதில் நிதிகளை முதலீடு செய்தல் கடன் வசதிகளை வழங்குதல் இலாபங்களை செலுத்துதல் (திவிநெகும சமூக அடிப்படை வங்கிகள்) | விடய இலக்கம் 35 –<br>பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டங்களினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள அளவுக்கு பணம் கடனாக பெறுதல் |

சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் சட்டத்தின் கீழ் தாபிக்கப்படுகின்ற பல்வேறு நோக்கங்கள், அதிகாரங்கள் மற்றும் பணிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள பரந்தளவான விதம் மற்றும் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பான சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் மூலம் செய்கின்ற அழுத்தத்தைக் கவனத்தில் கொள்ளும் போது மாகாண சபைகளினால் ஆற்றப்படுகின்ற பணிகளை மாகாண சபைகளைத் தவிர்த்து மத்திய அரசுக்கு ஆற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கி மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு மாகாண சபைகளுக்கு உள்ள ஆற்றலைக் குறைக்கின்றதொரு நிறுவனக் கட்டமைப்பு சட்டத்தினால் உருவாக்கப்படுகின்ற அச்சுறுத்தல் வெளிப்படுத்தப்படுகின்றது.

இதன் மூலம் மாகாண சபைகளின் செயற்பணியைக் குறைத்து எதிர்காலத்தில் அவை எந்தவொரு பயனுமற்ற நிறுவனங்களாக மாற்றப்பட முடியும்.

3. அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள்

சட்ட மூலத்தினால் அமைச்சருக்கு விசேடமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், அவை கீழே விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

(1) திவிநெகும தேசிய சபைக்கு (தி.தே.ச.) நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்கள் 11 பேரில் 6 பேரை நியமனம் செய்கின்ற அதிகாரம் அமைச்சருக்கு உண்டு.
7(2) பிரிவு) திவிநெகும திணைக்களத்தின் நிர்வாகம் மற்றும் கொள்கைகளுக்கு ஏற்புடைய விடயங்கள் தொடர்பான சட்டரீதியான அதிகாரம் தி.தே.சபைக்கு பொறுப்பளிக்கப்படும். 7(1) மற்றும் 42 (1) பிரிவுகள்) திவிநெகும திணைக்களம் தொடர்பாக தி.தே.சபையினால் ஆக்கப்பட்டுள்ள சட்டங்களை அமுல்படுத்த முடிவது அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் மாத்திரமாகும். 42(2).[105]

[10] எஸ்சீ எஸ்டி 01/2012 ஆம் இலக்க வழக்கல் கோப்பிடப்பட்ட எழுத்திலான சமர்ப்புரையில் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது. இந்த ஏற்பாட்டின் மூலம் அரச சேவைகள் சட்டத்திட்டங்களுக்குப் புறம்பாகச் சென்று திவிநெகும தேசிய சபை எனும் விசேட நிறுவனமொன்றினால் நிருவாகம் செய்யப்படுகின்ற திணைக்களமொன்று நிர்மாணிக்கப்படும். பொதுவாக திணைக்களங்கள், அமைச்சரவை தீர்மானங்கள், அமைச்சரவையினால் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் என்பவற்றினால் நிருவாகம் செய்யப்படுகின்றன.

(2) திவிநெகும சமுதாய அடிப்படையிலான அமைப்புகளுக்கு உரித்தான நிதியங்கள் திவிநெகும சமுதாய அடிப்படையிலான வங்கிகளில் வைப்புச் செய்து பேணிவருவது தொடர்பான கட்டளைகளை ஆக்குதல் (13 ஆம் பிரிவு)

(3) திவிநெகும சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் திவிநெகும சமுதாய அடிப்படையிலான வங்கிகளின் பதிவுசெய்தல் செயன்முறைகள் மற்றும் மேற்படி செயன்முறைகளுக்குரிய ஏனைய எந்தவொரு விடயத்தினையும் குறித்துரைக்கும் அதிகாரம் அமைச்சருக்குள்ளது. 25(2) மற்றும் 29(2) பிரிவுகள்

4. திவிநெகும சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களுக்காக முகாமைத்துவச் சபையொன்றை நியமிப்பதற்கான அதிகாரம் அமைச்சருக்கு உள்ளது. முகாமைத்துவச் சபையானது 8 அங்கத்தவர்களைக் கொண்டமைந்துள்ளதோடு அவர்களுள் 5 பேர் பதவிவழி அதிகாரத்தில் நியமிக்கப்படுவதுடன் எஞ்சிய 3 பேர் அமைச்சரினால் நியமிக்கப்படுவர். பதவி வழி அதிகாரத்தில் நியமிக்கப்டுகின்ற அங்கத்தவர்களில் சிலர் அமைச்சருக்கு நெருக்கமானவர்களாவர்.[116] அமைச்சரினால் விதிக்கப்படுகின்ற கட்டளைகளுக்கு உட்பட்டதாக திவிநெகும சமுதாய அடிப்படையிலான வங்கிகளினதும் வங்கிச் சங்கங்களினதும் நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்கமைத்தல் என்பவற்றுக்குப் பொறுப்பாக முகாமைத்துவச்சபை இருக்கும். (33)

5. திவிநெகும அபிவிருத்தி நிதியம் பயன்படுத்தப்படும் விதம் மற்றும் நோக்கங்கள் என்பவற்றை குறித்துரைக்கும் அதிகாரம் அமைச்சருக்கு உள்ளது (35 ஆம் பிரிவு)

6. இச்சட்டத்திலுள்ள அலுவல்களுக்காக கட்டளைகளை ஆக்கும் அதிகாரம் அமைச்சருக்கு உள்ளது. (41 ஆம் பிரிவு) இச் சாதாரண அதிகாரத்திற்கு தீங்கு ஏற்படாதவாறு பின்வரும் துறைகள் தொடர்பாக கட்டளைகளை ஆக்கும் அதிகாரம் அமைச்சருக்கு உள்ளது.

(அ) திவிநெகும சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் மற்றும் திவிநெகும பிராந்திய அமைப்புக்களுக்கான யாப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் (41 (1) அ மற்றும் (ஆ) பிரிவு)

(ஆ) திவிநெகும பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான அளவுகோள்கள் 41 (1) (2) பிரிவு

---

[11] திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், நிதி அமைச்சின் செயலாளரது பிரதிநிதி, திணைக்களத்தின் வங்கி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர், மத்திய வங்கியின் ஆளுநரால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதி மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் பதவிவழி அதிகாரத்தில் நியமனம் பெறும் அங்கத்தவர்களாவர்

(இ) திவிநெகும சமுதாய அடிப்படையிலான அமைப்புகளினதும் சமுதாய அடிப்படையிலான வங்கிகளினதும் அங்கத்தவராவதற்கான அளவுகோல்கள் (41 (1) ஊ பிரிவு)

(ஈ) சமுதாய அடிப்படையிலான அமைப்புகள், சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுதாய அடிப்படையிலான வங்கிச் சங்கங்கள் என்பனவற்றை மேற்பார்வை, ஒழுங்கமைத்தல் மற்றும் மதிப்பீடு செய்யப்படுதலுடன் சம்பந்தப்பட்ட அளவுகோல்கள் ( 41 (1) (எ) பிரிவு)

(உ) திவிநெகும அபிவிருத்தி நிதியம் மற்றும் திவிநெகும சுழற்சி நிதியத்திற்கான சகல நடவடிக்கைகளும் (41 (1) ஐ)

அமைச்சரினால் இயற்றப்படுகின்ற கட்டளைகள், அவை வர்த்தமாணி அறிவித்தலில் வெளியிடப்படுகின்ற திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவதோடு 3 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

சட்டத்தினால் ஒழுங்கமைக்கப்படுகின்ற நிறுவனங்களுக்கு பரந்தளவிலான அதிகாரங்கள் உள்ளதோடு கட்டளைகளை ஆக்குவதற்கும் பிரதான பதவிகளுக்கு ஆட்களை நியமிப்பதற்கும் அமைச்சருக்கு அதிகாரம் உள்ளதால் அவை அமைச்சருக்கு கீழ்ப்படிந்து செயற்படும். அதிகாரங்கள் பண்முகப்படுத்தப்படுகின்ற விதம் கட்டமைப்பு ரீதியில் காட்சியளித்தாலும் இந் நிறுவனங்கள் தொடர்பாக பெருமளவிலான கட்டுப்பாட்டினை அமைச்சர் கொண்டிருப்பது பிரச்சினைக்குரியதாகும். தனிநபர் மீது அதிகாரம் உறுதிப்படுத்தப்படுவதே அதற்கான காரணமாகும்.

**4. பொது ஏற்பாடுகள்**

1. திவிநெகும திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் திணைக்களத்தின் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட இரகசிய பிரகடனமொன்றில் ஒப்பமிடுவது அவசியமாகும். (38 ஆம் பிரிவு) நீதிமன்றத்தினால் அல்லது எழுத்திலான சட்டத்தினால் அரசாங்க உத்தியோகத்தர்களின் வகைப்பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பாக கேள்வியெழுப்பும் சந்தர்ப்பத்தைத் தவிர அத்தகவல்களை வெளிப்படுத்தலாகாதென அவர்களுக்கு கடுமையாக வலியுறுத்தப்படுகின்றது.

2. தாம் கோருகின்ற தகவல்களைப் பெற்றுத்தருமாறு நபரொருவருக்கு கட்டளையிட்டு எழுத்தின் மூலம் அறிவிப்பதற்கு திவிநெகும திணைக்களத்திற்கு அல்லது அதிகாரம் கொண்ட எவரேனுமோர் நபருக்கு அதிகாரம் உள்ளது. (39 ஆம் பிரிவு) இந்த

ஏற்பாட்டினை வரைவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள மொழியின் பரந்த தன்மையின் பிரகாரம் ஏதேனும் தகவலைப் பெற்றுத் தருமாறு எவரையும் கட்டாயப்படுத்தும் ஆற்றல் இதன்மூலம் கிடைக்கப்படுகின்றதென கருதப்படுவதாக பொருள்கோடல் செய்யலாம்.

3. திவிநெகும சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற எந்தவொரு நபரும் (அது பாராளுமன்றத்தின் நிறைவேற்றப்பட்ட பின்னர்) சிறைத்தண்டனைக்கு அல்லது தண்டத்திற்கு உட்படுதல் வேண்டும். (சுருக்கவழக்கு விசாரணையின் பின்) (40 ஆம் பிரிவு)

39 ஆம் பிரிவின் பரந்த மற்றும் தெளிவற்ற தன்மையின் அடிப்படையில் இந்த ஏற்பாடானது விசேடமாக சிக்கலானது.

## 5. தற்போது இயங்கிவருகின்ற அதிகார சபைகளில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் தொழிலைப் பாதுகாத்தல்[127]

1. 43 (உ) (i) பிரிவின் மூலம் ஊழியர்களுக்கு திணைக்களத்தில் இணைவதற்கான மாற்றுவழி வழங்கப்படுவதோடு அதன் மூலம் அவர்கள் அரச ஊழியர்களாக மாறுவர். எவ்வாறாயினும் அவர்களது சம்பள நிலைமைகளை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் சட்டமூலத்திலில்லை. மேலும் தற்போதுள்ள ஊழியர்கள் அரசசேவையில் இணைத்துக்கொள்ளப்படுவார்களா? மற்றும் அது எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பவை தொடர்பான தகவல்கள் தரப்படவில்லை.

2. 43 (உ) (ii) பிரிவின் பிரகாரம், ஊழியர்கள் சுயவிருப்பத்தில் ஓய்வுபெற விரும்பும் பட்சத்தில் அமைச்சரினால் குறித்துரைக்கப்படுகின்ற ஊதியம் அவர்களுக்குச் செலுத்தப்படுவதோடு அந்த ஊதியமானது எத்தகைய வழிகாட்டலுமின்றி அவர்களால் தான்தோன்றித்தனமாக தீர்மானிக்கப்படும்.

## 6. சட்டமூலம் தொடர்பில் விவாதத்திற்குரியதான அடிப்படைக் காரணிகள்

மா. கொ. நிலையத்தினால் 2012ல் உயர் நிதிமன்றில் கேள்விக்குட்படுத்திய சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட யாப்பு செயற்பாடுகள் தொடர்பில் மேலே பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2012 ஜனவரி மாதத்தில் மிக அண்மித்த ஒரு தினத்தில் இச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தின் போது பயன்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் அரசியல் கட்சிகள், மக்கள் பிரதிநிதிகள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் வேறு உரிய நபர்கள் அவதானம் செலுத்த வேண்டிய மிகப் பிரதான விடயங்கள் தொடர்பில் மா. கொ. நிலையம் இவ் அட்டவணையை தாயாரித்துள்ளது. இங்கு குறிப்பிடப்படும் விடயங்கள் வெறும் சட்டமூலத்திற்கு

12 இப்பகுதியானது எஸ்சீ எஸ்டி 01/2012 ஆம் இலக்க வழங்கில் கோப்பிடப்பட்ட எழுத்திலான சமர்ப்புரை மீது அடிப்படையாக அமைந்துள்ளது.

மாத்திரம் வரையறுக்கப்படாத ஒரு விடயமாகும். அதேவேளை இலங்கையின் ஜனநாயகம், அதிகாரப்பகிர்வு தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டு இக் குறிப்பு வெளியடப்பட்டுள்ளமை முக்கியமான விடயமாகும்.

1. தனிநபர் - நிறுவனரீதியான – அரசின் சில மட்டங்களில் அதிகாரம் வரையறுக்கப்படுவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் பின்னணியில் காணப்படும் உண்மையான காரணங்கள் யாவை

2. சட்டமூலத்தின் வறுமை ஒழிப்பு மற்றும் நிலையான அபிவிருத்தி ஆகியவற்றை முன்னிலைப்படுத்த முடியுனெ அரசு முயற்சித்த போதும் அந் நோக்கத்தை அடையும் பொருட்டு அதிகாரத்தை மையப்படுத்த வேண்டிய அவசியம் யாது?

3. மாகாண சபையிடம் மிகக் குறைந்தளவு அதிகாரங்கள் மாத்திரம் வழங்கப்பட்டுள்ள 13வது அரசியல் அமைப்பை இல்லாது செய்வதற்கு சட்டமூலத்தின் ஊடாக முயற்சிப்பது என்ன காரணத்தினால்? இவ்விடயமானது தற்போதைய நிலையைத் தாண்டிய 13வது அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கு அடிப்படையாக அமையும் அரசின் தீர்வொன்றை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் அரசின் நிலைப்பாட்டுக்கு எதிரான விடயமாகும்.

4. சட்டமூலத்தின் மூலம் அமைச்சருக்கு அதிகப்படியான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதோடு அந்தளவிலான அதிகாரங்கள் எதற்காக அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தக் கூடிய சாதாரண காரணங்களால் சட்ட மூலத்தில் தெளிவுபடுத்தப்படுவதை காண்பதற்கில்லை.

5. அமைச்சரின் அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்படுகையில் ( அமைச்சரவை அனுமதி, நிதி காண்காணிப்பு என்பன) அவை தொடர்பில் காணப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் (Safeguard) யாவை? அதேவேளை அதிகார துஷ்பிரயோகம் செய்யப்படுகையில் (உ+ம் தேர்தலின் போது ) மற்றும் மக்களது நிதி தவறான வழியில் கையாளப்படுவதை தடுப்பதற்கு அப்பாதுகாப்பு ஏற்பாடுகள் போதுமானதா?

6. முன்மொழிவு திவிநெகும சமுதாய அடிப்படை வங்கிகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் நிறுவன கட்டமைப்பு, வைப்பீடு செய்பவர்களை பாதுகாத்தல் ஆகியவற்றிற்குப் போதுமானதா?

7. முன்மொழிவு திவிநெகும திணைக்களம் உரிய ஊழியர்கள் தொடர்பில் மற்றும் சமூர்த்தி அதிகாரசபை, தெற்கு மற்றும் மலைய அபிவிருத்தி அதிகார சபையில் தற்போது உள்ள ஊழியர்களுக்கு உரியதான வரப்பிரசாதங்கள் தொடர்பில் எவ்விதமான அழுத்தத்தை ஏற்படுத்தும்?

8. இரகசிய பிரகடனம் தொடர்பான பிரிவின் (38வது பிரிவு) விடயப்பரப்பும் அதன் நோக்கம் என்பதாக குறிப்பிடப்பட்டுள்ள நோக்கமானது திவிநெகும பயனாளிகளின் இரகசியத்தை பாதுகாத்தல் என்பதனூடாக நியாயமானதாக அமைகின்றதா?

9. அண்மைக்காலமாக, கடந்த சில வாரங்களாக அரசாங்கமானது பாராளுமன்றத்தில் மேலான்மை என்ற எண்ணக்கருவை பாதுகாப்பது தொடர்பாக செயற்பட்டது. மக்களது நிதி தொடர்பில் அரசியலமைப்பின் ஊடாக ஏற்படுத்தப்பட்டுள்ள பாராளுமன்ற அதிகாரம் தொடர்பில் இது உரியதான ஒரு விடயமாக அமையாதா? சட்டமூலம் தற்போதுள்ள நிலையில் நடைமுறைப்படுத்தப்படுமாயின் மக்களது நிதியானது பாராளுமன்றத்துக்குரிய அனைத்து அதிகாரங்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும்.

CPA

Centre for Policy Alternatives

විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

**மாற்றுக்கொள்கைகளுக்கானநிலையம்**

மாற்றுக்கொள்கைகளுக்கானநிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக அரசாங்கம், முரண்பாடுகளைத் தீர்த்தல் அதனுடன் இணைந்த முரண்பாடுகள் மீது அவதானம் செலுத்தும். பொதுமக்களின் கொள்கை தொடர்பான சம்பாக்ஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப் படுவதாலும், அதைப் பலப்படுத்தவேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும் 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொதுமக்களின் கொள்கை விமர்சன ரீதியாக விமர்சிக்கப்படல், மாற்றுவழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு ,அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

விலாசம்: 24ᵕ2, 28வது ஒழுங்கை, ப்.ஃ.ளவர்வீதி, கொழும்பு - 07
தொலைபேசி: *+94(11) 2565304/5/6*
ஃ.பக்ஸ: *+94(11) 4714460*
இணையதளம் : *www.cpalanka.org*
மின் அஞ்சல் : info@cpalanka.org